4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 91/2013 நாள்: 09.09.2025 வா.சா.1 – பங்கஜவள்ளி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

நானும், எனது சகோதரிகளும் சேர்ந்து எனது தந்தையின் சொத்தின் மீது பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தந்தை R.C.நடராஜனுக்கு எதிராக ஏற்றுதலை ஆற்றுக பரிகாரம் கோரி வாத்தியார் சௌந்தராஜன் என்பவர் மீது உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.460/1994 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சாட்சி அதுபற்றி தெரியாது என்று கூறுகிறார். மேற்படி வழக்கில் நானோ, எனது தாயார் நாச்சம்மாள் மற்றும் சகோதரி பாக்கியலெட்சுமி ஆகியோர்கள் ஒரு நாளும் மேற்படி நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் பற்றி எனக்கு தெரியாது, மேற்படி கையொப்பங்கள் மேற்படி நீதிமன்றத்தில் வரும்காலங்களில் முன்னிலையாவோம் என்று இடைநிலை மனு எண்.33/2006 என்பதில் கையொப்பமிட்டுள்ளோம் என்றால் சாட்சி அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். நான் மேற்படி நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி நீதிமன்றத்தில் இருந்து மேற்படி வழக்கு சம்பந்தமாக அழைப்பாணை எதுவும் வரவில்லை. எனக்கு அழைப்பாணை வரவில்லை என்று நான் சொல்வது பொய் என்றும், அழைப்பாணையின் அடிப்படையில் மேற்படி நீதிமன்றத்தில்

முன்னிலையாகவிட்டு தொடர்ச்சியாக வழக்கை நடத்தாமல், ஒரு தலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கு காரணமாக இருந்தோம் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எனது தந்தை எதிர் வழக்குரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் யாருடைய கையொப்பம் என்றால் சாட்சி அது எனது தந்தையின் கையொப்பமில்லை என்று கூறுகிறார். மேற்படி ஆவணம் அசல் வழக்கு எண். 460/1994 ல் எதிர் வழக்குரை என்று சொன்னால் அது பற்றி தெரியாது. எனது தந்தை எப்படி கையொப்பம் போடுவார் என்று எனக்கு தெரியும். எனது தந்தையின் கையொப்பத்தை எந்த ஆவணத்தில் நான் கடைசியாக பார்த்தேன் என்றால் சாட்சி எனது தந்தை இறந்து 23 ஆண்டுகள் ஆகிறது, அவருடைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன், எந்த ஆவணம் என்று நான் நம்பரை பார்த்து தான் சொல்லமுடியும், எனது தந்தையின் கையொப்பம் இழுத்து இழுத்து இருக்கும் என்று கூறுகிறார். எனது தந்தை தாவா சொத்து சம்பந்தமாக எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.460/1994 ல் எனது தந்தை தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 3வது பக்கத்தில் 11வது பாராவில் எனது தந்தை தாவா சொத்து சம்பந்தமாக அவரது மகன்களுக்கு 28.02.1986 ல் ஒரு குடும்ப ஏற்பாடு எழுதி வைத்துவிட்டதாகவும், அதற்கு பின் தனக்கு எந்த சொத்தும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் மறுப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் தற்போதைய வீட்டிற்கு 2005 ம் ஆண்டு வந்தேன். தாவா சொத்து சம்பந்தமாக நான் வரி செலுத்தியுள்ளேன், எனது தந்தை பெயருக்கு செலுத்தியுள்ளேன், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் வரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான மின் கட்டணத்தை நான் செலுத்தியுள்ளேன், அதற்கான

ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன், அவ்வாறு தாக்கல் செய்யாமல் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பேப்பரிலும், 28.02.1986 தேதியிட்ட குடும்ப ஏற்பாடு பற்றி விளம்பரப்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. 08.08.1995 ம் தேதி வழக்கறிஞர்கள் பி.செல்வகுமார், T.தமிழ்செல்வன் மற்றும் A.பாலசுப்பிரமணியம் ஆகியோர்கள் மூலமாக பொது அறிவிப்பு தினமலர் நாளிதழில் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2வது பிரதிவாதி சண்முக வடிவேலும், இறந்து போன எனது சகோதரர் சௌந்தராஜனும், 20.08.1995 ம் தேதி பொள்ளாச்சியை சேர்ந்த வழக்கறிஞர் திரு. மனோகரன் மூலமாக மேற்படி குடும்ப ஏற்பாடு பற்றி பொது அறிவிப்பு நாளிதழில் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி குடும்ப ஏற்பாட்டின் அசல் ஆவணத்தை என்னுடைய சகோதரர் கிருஷ்ணகுமார் எடுத்து சென்று விட்டதாக 2ம் பிரதிவாதி சண்முக வடிவேல் 29.05.2003 ம் தேதியன்று காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண்.460/1994 வழக்கின் தீர்ப்பை தற்போதிலிருந்து இரண்டு மாதத்திற்கு முன்பு சார்பு நீதிமன்றம், உடுமலைபேட்டை தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது என்றால் அது பற்றி தெரியாது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி வழக்கில் வாத்தியார் சௌந்தராஜனுக்கு ரூ.2 லட்சம் பிரதிவாதிகளாகிய நாங்கள் திருப்பி தரவேண்டும் என்று தீர்ப்பாணை தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளவழக்கை நாங்கள் தொடர்ந்து முன்னிலையாகாத காரணத்தினால் அது பற்றி எங்களுக்கு சரியாக தெரியாமல் தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தந்தையே அவர் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்று எதிர் வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தவறாக பாகம் கோரி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. கூடுதல் எதிருரை தாக்கல் செய்யாமல் கூடுதல் முதல்

**விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.